**இராமநாதபுரம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**
( 16 -11-2016 – 20-11-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 15-11-2016

## கடந்த கால வானிலை 11-11-2016 முதல் 14-11-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 4.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31-33 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 24-26 |
| மேக மூட்டம் | 3-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 70-94 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 4-6 |

## எதிர்பார்க்கப்படும் வானிலை 20-11-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 16.11.16 | 17.11.16 | 18.11.16 | 19.11.16 | 20.11.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 2 | 15 | 4 | 3 | 22 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 86 | 86 | 86 | 86 | 86 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 83 | 83 | 83 | 83 | 83 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

### குறுஞ்செய்தி :

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மேக:மூட்டத்துடன் காணப்படும்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

### முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் மிளகாய்

- நிலவிவரும் தட்பவெப்ப சூழ்நிலையால் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கக் கூடும். இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.
- லேசான மழையுடன் கூடிய குளிர்ந்த தட்பவெட்ப சூழ்நிலை நிலவுவதால் விவசாயிகள் தங்களது பயிர்களில் ஏற்படும் நோய்த் தாக்குதல் குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.
- மிளகாய் பயிரில் காணப்படும் மிளகாய் பேன்களை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மிலி. ப்ரொபொனோபாஸ் மருந்தினை கலந்து தெளிக்கவும். இத்துடன் ஒரு மிலி. ஒட்டுப்பசை அல்லது ஒரு கிராம் காதி சோப்பினை கலந்து தெளிக்கவும்.
- பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு 25 கிலோ என்ற அளவில் மெக்னீசியம் சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை அளிக்கலாம்.
- தற்போதைய தட்பவெட்ப சூழ்நிலையில் நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 1மு பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலினை பயன்படுத்தி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பின்பும் பசுமாட்டின் மடியை கழுவி விடவும்.